**செய்தி வெளியீடு எண் : 1352** **நாள் : 07.08.2022**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 4வது நினைவு நாளை முன்னிட்டு மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் போட்டியில் பெறப்பட்ட பதிவு கட்டணத் தொகை ரூ.1,20,69,980/- முழுவதையும், எழும்பூர் அரசு குழந்தைகள் மற்றும் தாய் சேய் நல மருத்துவமனைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 4வது நினைவு நாளை முன்னிட்டு, இன்று (07.08.2022) பெசன்ட் நகர், ஆல்காட் பள்ளி வளாகத்தில், மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களின் ஏற்பாட்டில் கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் போட்டி நடைபெற்றது. இம்மாராத்தான் போட்டிக்கான 5 கி.மீ., தூரப் போட்டியை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களும், 10 கி.மீ., போட்டியை மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களும், 21 கி.மீ., போட்டியை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்களும், 42 கி.மீ., போட்டியை மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்களும் தொடங்கி வைத்தார்கள். இந்தியாவில் இதுவரை எந்த மாரத்தானிலும் இல்லாத அளவுக்கு 43,320 பேர் பதிவு செய்து கலந்துகொண்டனர். இதில் 10,985 பேர் பெண்கள். இந்த மாரத்தான் ஓட்டத்தில் பதிவுக்கட்டணமாக பெறப்பட்ட ரூ.1,20,69,980/- தொகையை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி.செந்தில் குமார், இ.ஆ.ப., அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒப்படைத்தார்கள். தொகை முழுவதையும், எழும்பூர் அரசு குழந்தைகள் மற்றும் தாய் சேய் நல மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டு, ஏழைக் குழந்தைகளின் மருத்துவப் பயன்பாட்டிற்காக இந்நிதி செலவிடப்படும்.

இது வெறும் மாரத்தான் ஓட்டமாக மட்டுமல்லாமல் நம் கலாச்சாரத்தை சார்ந்த உணர்வோடும், ஆற்றலோடும், மகிழ்ச்சியோடும் ஓடும் வீரர்கள் ஓடுபாதை எங்கும் தமிழக கலாச்சாரங்களை வலியுறுத்துகிற வகையில் திருவண்ணாமலை பெரிய மேளம், காரமடை துடும்பாட்டம், இராமநாதபுரம் ஜிம்பளா மேளம் உள்ளிட்ட

8 வகையான மேளங்கள் இசைக்கப்பட்டன. இம்மாரத்தான் போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது. 12 இடங்களில் மாரத்தான் போட்டியில் பங்கேற்ற வீரர்களுக்கு குடிநீர், தர்ப்பூசணி, சாத்துக்குடி பழச்சாறு மற்றும் வாழைப்பழம் ஆகியவை வழங்கப்பட்டன. மேலும், மாராத்தான் போட்டியில் வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக சைதாப்பேட்டையில் நிறுவ உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வெண்கல சிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து மாலை அணிவித்தார்.

ஆசியாவிலேயே மிகப்பெரிய நினைவு மாரத்தானாக அங்கீகரிக்கப்பட்டதற்கான சான்றிதழை 'ஆசியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்' நிறுவனம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினர்.

மேலும் 5 கி.மீ., மாரத்தான் போட்டியில் முதல் பரிசு பெற்ற திரு.மணிசரத்துக்கு ரூ.25,000/-மும், இரண்டாவது பரிசு பெற்ற திரு.தனேச்க்கு ரூ.15,000/-மும், 10 கி.மீ., போட்டியில் முதல் பரிசு பெற்ற கோயம்புத்தூரைச் சேர்ந்த திரு.சதீஷ்குமாருக்கு ரூ.50,000/-மும், இரண்டாவது பரிசு பெற்ற உத்திரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த திரு.தசந்த்குமாருக்கு ரூ.25,000/-மும், மூன்றாவது பரிசு பெற்ற ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த திரு.ராம்பால்க்கு ரூ.15,000/-மும், 21 கி.மீ., போட்டியில் முதல் பரிசு பெற்ற புதுக்கோட்டையைச் சேர்ந்த இராணுவ வீரர் திரு.லட்சுமன் கோவிந்த்க்கு ரூ.1,00,000/-மும், இரண்டாவது பரிசு பெற்ற தேனியைச் சேர்ந்த இராணுவ வீரர் திரு.ராஜ்குமாருக்கு ரூ.50,000/-மும், மூன்றாவது பரிசு பெற்ற உத்திரபிரதேசம் மாநிலத்தைச் சேர்ந்த திரு.சந்திரசேகருக்கு ரூ.25,000/-மும், 42 கி.மீ., போட்டியில் முதல் பரிசு பெற்ற ஜெய்ப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த துணை காவல் ஆய்வாளர் திரு.ஷேர்சிங்க்கு ரூ.1,00,000/- மும் பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும், போட்டியில் பங்கேற்ற 12 பெண்களுக்கு சிறப்பு பரிசாக தலா ரூ.5000/- வீதம் வழங்கப்பட்டது.

மாரத்தான் போட்டியில் பங்கேற்ற முக்கிய பிரமுகர்களான தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு.சைலேந்திரபாபு, இ.கா.ப., இந்திய இராணுவத்தின் தென்னிந்திய தலைமை அதிகாரி – Major General S.S.Dahiya, இந்திய

கடற்படை உயரதிகாரி Commondore J. Suresh, இங்கிலாந்து நாட்டின் அமீஸ்புரி நகரின் துணை மேயர் மோனிகா தேவேந்திரன், இரண்டு கண் பார்வையிழந்த பஞ்சாபை சேர்ந்த வீரர் திரு.சாவ்லா ஆகியோர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்பு செய்து சான்றிதழ்களை வழங்கினார். மேலும், அமெரிக்கா, பிரிட்டிஷ், ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் வெளிநாட்டு துணைத் தூதர்கள் மற்றும் மாராத்தான் போட்டிக்கு நன்கொடை அளித்த நன்கொடையாளர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு செய்து நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.க.பொன்முடி, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ். இரகுபதி, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.டி.ஆர்.பாலு, திருமதி.தமிழச்சி தங்கப்பாண்டியன், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின், சட்டமன்ற உறுப்பினர்கள் காரப்பாக்கம் திரு.கணபதி, திரு.எஸ்.அரவிந்த் ரமேஷ், திரு.ஏ.எம்.வி.பிரபாகரராஜா, அமெரிக்கா, பிரிட்டிஷ், ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் வெளிநாட்டு துணைத் தூதர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in